**வலிப்பு நோய் வைத்தியசாலை மற்றும் சுகாதார நிலையங்களை நிறுவுவதற்கான செயற்திட்டம் - 2018**

---

வலிப்பு நோய் வைத்தியசாலை மற்றும் சுகாதார நிலையங்களை நிறுவுவதற்கான செயற்திட்டத்தின் 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் அபிவிருத்திக்கான சவுதி நிதியத்திற்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2008 மார்ச் 26 ஆந் திகதிய 7/477 ஆம் இலக்க மற்றும் 2015 ஒக்தோபர் 30 ஆந் திகதிய 11/640 ஆம் இலக்க உடன்படிக்கைகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், குறிக்கோள்கள், நிதியிடல் மற்றும் காலப்பகுதி

கடன் உடன்படிக்கையின் பிரகாரம், சுகாதாரம் போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சானது செயற்திட்டத்தின் நிறைவேற்றல் மற்றும் அமுலாக்கலுக்கான நிறுவனம் ஆகும். கொழும்பிலுள்ள தேசிய வைத்தியசாலை இடங்களில் முழுமையான உபகரண வசதியுடன் வலிப்பு நோய் வைத்தியசாலை மற்றும் ஒவ்வொரு மாகாணங்களிலும் மாகாண சுகாதார நிலையங்களை நிர்மாணிப்பதே செயற்திட்டத்தின் குறிக்கோளாகும். கடன் உடன்படிக்கைகளின் பிரகாரம், ஆரம்பத்தில் ரூபா 3,000 மில்லியனிற்கு சமமான சவுதி றியால் 75 மில்லியன் அபிவிருத்திக்கான சவுதி நிதியத்தால் ஆரம்பத்தில் நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டது. மேலும், 2015 ஒக்தோபர் 30 இல் குறைநிரப்பு கடன் உடன்படிக்கையினூடாக ரூபா 1,800 மில்லியனிற்கு சமமான சவுதி றியால் 45 மில்லியன் அபிவிருத்திக்கான சவுதி நிதியத்தால் வழங்குவதற்கு உடன்பட்டிருந்தது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2008 மார்ச் 26 இல் தொடங்கியிருந்ததுடன் 2009 திசெம்பர் 31 அளவில் பூர்த்தியாக்குவதற்கு பட்டியலிடப்பட்டது. பின்னர், செயற்திட்டக் காலப்பகுதி 2018 திசெம்பர் 31 வரை 06 சந்தர்ப்பங்களில் நீடிக்கப்பட்டிருந்தது.

## 1.3 அபிப்பிராயம்

நிதிக்கூற்றுக்களானவை செயற்திட்டத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

---

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.
செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

**1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்**

---

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது நான் அடையாளம் காணும் யாதேனும் உள்ளகக் கட்டுப்பாட்டில் உள்ள குறிப்பிடத்தக்க குறைபாடுகள் உட்பட , குறிப்பிடத்தக்க கனக்காய்வு கண்டுபிடிப்புக்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக ஆளுகைக்கு உட்பட்ட நபர்களுடன் நான் தொடர்பு கொள்கிறேன்.

## 2. பௌதீக செயலாற்றல்

### 2.1 செயற்திட்டத்தின் நடவடிக்கைகளின் செயல் முன்னேற்றம்

கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், 2014 ஏப்ரல் 03 அளவில் பூர்த்தியாக்கப்படுவதற்கு பட்டியலிடப்பட்டிருந்த வலிப்பு நோய் வைத்தியசாலையின் 08 தொடர்மாடி கட்டிடங்கள் 950 நாட்கள் காலதாமதத்துடன் பூர்த்தியாக்கப்பட்டு 2016 நவம்பர் 09 இல் வரிசை அமைச்சிற்கு கையளிக்கப்பட்டிருந்தது. பொதுமக்களின் பயன்பாட்டிற்காக வைத்தியசாலை 2017 ஒக்தோபர் 24 இல் திறக்கப்பட்டது. பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு பிரச்சனை | | தாக்கம் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
| --- | --- | --- | --- | --- |
| (அ) | 09 மாகாண சுகாதார நிலையங்களுக்காக மருத்துவ உபகரணங்களை பெறுகை செய்வதற்கு செலவு செய்ய உடன்பட்ட ரூபா 1,690.65 மில்லியனுக்கு சமனான 45 மில்லியன் சவுதி றியால் தொகையான மேலதிக கடனொன்று வலிப்பு வைத்தியசாலையின் கட்டிடத்தை நிர்மாணிப்பதற்கும் மருத்துவ உபகரணங்கள் மற்றும் ஏனைய உபகரணங்களை பெறுகை செய்வதற்கும் முற்றிலுமாக பயன்படுத்தப்பட்டது. | குறிக் கோள்களை அடைவதற்காக ஒதுக்கீடுகள் வினைத்திறனாக பயன்படுத்த வில்லை. | கருத்து தெரிவிக்கவில்லை. | செயற்திட்டத்தின் செலவினங்கள் மீதான பலவீனமான நிதிக் கட்டுப்பாடுகளுக்கான காரணங்களை புலனாய்வு செய்ய வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | ரூபா 6,295.72 மில்லியனுக்கு சமமான 161.25 மில்லியன் சவுதி றியால் கிரயத்தில் 09 மாகாண சுகாதார நிலையங்களை தீவு முழுவதும் நிறுவுவதற்கு செயற்திட்டமானது திட்டமிட்டிருந்தது. எவ்வாறாயினும், வெளிப்புற நோயாளர் கிளினிக்குகள் (Clinics) ஆய்வு கூடங்கள், மற்றும் பயிற்சி நிலையங்களுடன் கூடிய 09 சுகாதார நிலையங்களின் நிர்மாணிப்பு தொடர்பான நடவடிக்கைகள் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஆரம்பிக்கப் பட்டிருக்கவில்லை. | செயற் திட்டத்தின் உத்தேசித்த குறிக் கோள்கன் அடையப்பட வில்லை. | கருத்து தெரிவிக்கவில்லை. | தோல்வியடைந்த செயற்திட்டங்களினை செயற்படுத்துவதன் மீதான இடரை குறைப்பதற்குரிய செயற்திட்ட முகாமையின் தோல்விக்கான அம்சங்களினை புலனாய்வு செய்ய வேண்டும். |

## 2.2 செயற்திட்டத்தின் நோக்கங்களிலிருந்து நீங்கலாக மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகள்

| கணக்காய்வு பிரச்சனை | தாக்கம் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| வலிப்பு வைத்தியசாலை மற்றும் மாகாண சுகாதார நிலையங்களுக்காக மருத்துவ உபகரணங்களை பெறுகை செய்வதற்கு கடன் உடன்படிக்கையில் மேற்கொள்ளப்பட்ட ரூபா 1,075.90 மில்லியன் தொகையான ஒதுக்கீட்டில், ரூபா 337.26 மில்லியன் தொகையொன்று செயற்திட்டத்தின் குறிக்கோள்களுடன் தொடர்பற்ற தேசிய வைத்தியசாலையின் நரம்பியல் அதிர்ச்சி (Neuro Trauma) இற்கான மருத்துவ உபகரணங்களை பெறுகை செய்வதற்கு பயன்படுத்தப்பட்டிருந்தது. | உத்தேசித்த நோக்கங்களை அடைவதற்கு நிதிகளின் ஒதுக்கீடாபனது பயன்படுத்தப்பட வில்லை. | கருத்து தெரிவிக்கவில்லை. | செயற்திட்டத்தின் குறிக்கோள்களை அடைவதற்கு செயற்திட்டத்தின் முழு ஒதுக்கீடும் கண்டிப்பாக பயன்படுத்தப்பட வேண்டும். |

## 2.3 பயன்படுத்தப்படாத மற்றும் குறைப்பயன்பாடுடைய வளங்கள்

| கணக்காய்வு பிரச்சனை | தாக்கம் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| அசல் விலைமனு பத்திரங்களில் குறிப்பிடப்படாத தடையற்ற மின் முறைமையின் (UPS) அலகினை உள்ளடக்கிய கட்டாயமான உதிரிபாகங்கள் கிடைக்கப்பெறாமை காரணமாக ரூபா 176 மில்லியனுக்கு சமனான ஐ.அ.டொலர் 1.35 மில்லியன் கிரயத்தில் செயற்திட்டத்தால் பெறுகை செய்யப்பட்ட பொசிட்ரான் எமிசன் டொமோகிராபி (PET) ஸ்கேனர் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 18 மாதங்களுக்கு மேலாக பயன்படுத்தப்படாமல் இருந்தது. மேலும், ஸ்கேனர் (Scanner) இயந்திரத்தின் பயன்பாட்டிற்கான அத்தியாவசதியமான இரசாயனம் ‘‘கதிரியக்க பிளைடியொக்ஸி குளுகோஸ்’’ (Radiactive Flideoxy glucose) இன் வழங்கல் மற்றும் இயந்திரத்தின் வழங்குனரால் வைத்தியசாலையின் தொடர்புடைய உத்தியோகத்தர்களுக்கு வழங்குவதற்கு உடன்பட்ட தளத்தின் போதான (on site) மற்றும் வெளிநாட்டு பயிற்சி திட்டங்கள் 2018 திசெம்பர் 31 வரை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | மருத்துவ உபகரணங்களிலிருந்தான உத்தேசித்த நோக்கங்கள் நிறைவேற்றப் படாமல் போகலாம் மற்றும் இயந்திரத்தை பயன்படுத்தாமல்உத்தரவாக காலப்பகுதி காலாவதியாகின்றது. | கருத்து தெரிவிக்கவில்லை. | உத்தேசித்த நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு உபகரணத்தை உச்ச திறனில் முழுமையாகப் பயன்படுத்தப்பட வேண்டும். |